உ
சிவமயம்

REGISTERED AS NEWSPAPERINA GEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி [நீழலே

புத் ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு மார்கழி மீ உரு உ (1948 ஜனவரி 9 வெள்ளிக்கிழமை) [இல ஏசு

## சைவமே மெய்ச்சமயம்

( திரு. T. S. கந்தசாமி முதலியார் M. A. )

கோயமுத்தூரிற் சென்றவாரம் சைவசித்தாந்த மகாசமாஜத்தாதரவில் நிகழ்ந்த சைவர் மகாநாட்டில் தலைமைவகித்த வழக்கறிஞர் உயர்திரு T. S. கந்தசாமி முதலியார் M. A. அவர்கள் செய்த பிரசாரணத்தின் ஓர் பகுதியைக் கீழே தருகின்றோம்

(முற்றொடர்)

கடவுளைத் தீமை கண்டால் ஒறுக்கும் தெய்வமெனக் கொண்டுள்ளன சில சமயங்கள். நடுவு நிலையுள்ள நீதிபதியெனக் கொள்வன சில சமயங்கள். ஆநந்தனாய், ஆருயிர்க்கு எல்லையிலா வானந்தத்தை என்றும் அளிப்பவன் கடவுள் எனச் சில சமயங்கள் கூறுகின்றன. கடவுளைத் தீதிலா நன்மைத் திருவருட் குன்றெனக் கண்ட மக்கள், தங்கள் கடவுட்கு சிவம் எனப் பேரிட்டு வழங்கலாயினர். அவர்நெறி சிவநெறி. இச்சிவநெறி தமிழ்மக்களிடத்தே பல்லாயிர ஆண்டுகளாக காணப்படுகின்றது. அத்தமிழர் தங்கள் இனிமை மிக்க மொழிக்கு இனிமை யென்னும் பொருள்தரும் தமிழ் எனனும் பெயரைச் சூட்டினர். இன்பக் கடலாய் உள்ள தங்கள் கடவுட்கு இன்பத்தின் மற்றொரு பரியாயப் பொருள பயக்கும் சிவம் என்னும் பெயரைச் சூட்டினர். இச்சிவநெறி தமிழர் தனிநெறி.

வடமொழி தண்டமிழ் நாட்டிடைப் பயிலத் தொடங்கி அதுவே சமய நூல்கள் எழுதப்படற்குரிய மொழியென றெண்ணப்பட்டபோது தமிழர் தங்கள சமயக் கருத்துக்களை வடமொழியிலும் எழுதினார்கள் எனக் கருத இடமுளது வடமொழியில் சிவநெறி பற்றிச் சில நூல்கள் இருப்பதனால், சிவநெறிக் கொள்கை வடமொழி வாணர் கொள்கையென்றுவது, வடமொழியாளர் கொள்கை வழித்தாய்ச் சிவநெறிக் கொள்கை பிறந்ததென்று வது ஆகமாட்டாது.

பண்டைத் தமிழ் நூல்களில், 'முக்கட் செல்வர் நகர்', என்றும் 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்' என்றும், பேசப்படுவதால், தமிழர் கடவுள் சிவன் என்றும், அவரகுத் திருக்கோயில்கள் பண்டைக்காலத்திலேயே இருந்தன வென்றும தெளியப்படும். 'சிவம்' என்பது தனித் தமிழ்ச் சொல் எனக் கால்டுவெல் முதலிய ஆங்கிலரும் நடுவு நிலைமையுடன் ஆய்ந்து நிலைநாட்டியுள்ளார். அது முதற்கண் சிறப்பண்பை யுணர்த்திப் பின்னர் குணப்பண்பை யுணர்த்தியுள்ளது.

யார்க்கும் சைவ சமயத்திற் பிறக்கும் ஊழ் பெறலரிது. பிறந்தபின் சைவ சமயத்தின் நெறி நின்று வாழ்தலின்னுமரிது. நாம் சைவத்திற் பிறக்கும் நல்லூழ் பெற்றோம். சிவநெறி நூல்களை நாம் அனைவரும் கற்றல் வேண்டும். அனைவரும் கற்குமபடிக்கு மக்களைத் தூண்டுதல் வேண்டும். அனைவரும் கற்பதற் கேற்ற வசதிகளை நாம செய்துகொடுத்தல்வேண்டும, சிவநெறிக்கொள்கைகளை உலகெங்கணும் பரப்பி அவற்றைத் தழுவுவார் தழுவுக என, தழுவுதலைக் கேட்போர்க்கே விட்டுவிடல் வேண்டும். அக்கடமையை நாம் சிறிதும் செய்யவில்லை. சைவத்திற் பிறக்கும் ஊழ்பெற்றோரிலும், தங்கள் சமயக் கடவுளையும், சமய ஆசாரியர்களையும், சமய நூல்களையும், சமய நெறியையும் உணர்ந்துள்ளோர் மிகச் சிலர் என்பதை அறிய நாம் நம் கடமையைச் செய்யாமை பற்றி நாணவேண்டிய நிலையிலுள்ளோம்.

சைவத்தின் மிக்க சமயமுமில்லை சிவத்தின் மிக்க தெய்வமுமில்லை என ஆன்றோர் கூறியுள்ளார். சிவநெறியை உணர்த்தும் நூல்கள் மெய்கண்ட நூல்களாம். அவற்றுள் தலையாயது சிவஞானபோதம். சிவஞானபோதத்திற் கண்ட உண்மைகள், அந்நூல்கள் எழுதற்கு முன்பே தமிழகத்தில் வழங்கி வந்தன. அவற்றைத் தொடுத்தும், வகைப்படுத்தியும், முறைப்படுத்தியும் மெய்கண்டார் நூல் செய்துள்ளார். சிவஞான போதத்திற் கூறப்படும் உண்மைகளிற் பல திருக்குறளில் காணப்படுகின்றன. திருக்குறள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுந்தது எனச் சில அறிஞர்கள் கூறத் தலைப்படினும, அக்கூற்றுக்குப் போதிய சான்றுகள் இல்லையெனவே கரணலாம். திருக்குறள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுந்ததாகவே கொள்ளல் சால்புடைத்து. திருவள்ளுவர், உலகம உயிர், இறை என மூன்று நித்தப் பொருள்கள் உள எனக் கொண்டுளார். உயிர்கள் பல எனவும் அவர் கருதுகிறார் உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையதென்னும் கொள்கையும் திருக்குறளிற் காணலாம். இறைவன் எண்குணன் என்பர். அவர் 'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்' எனக் கூறலால் ஆன்மாக்களுக்கு, இறைவன் குருவாய் எழுந்தருளி, ஞானத்தை யுணர்த்துவன் என்றும, ஆன்மாக்கள், ஞானத்தின் வழி நின்று, இறைவனை அனுபூதியால் உணர்வர் என்றும் உய்த்துணர வைத்துள்ளார். இறைவனை ஆன்மாக்கள் பசுவறிவானும், பாசவறிவானும் காண்டல் அமையாது. பதிஞானத்தாலேயே இறைவனைக் காணலாம் என்னும் கொள்கை திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்'தில் பல இடங்களில் உணர்த்துகிறார். 'அடி' என்னும் சொல்லும பொருளும் அவ்வதிகாரத்தில் பல இடங்களில் வருகின்றமை காண்க. 'அடி' என்னும் சொல் பதிஞானத்தை யுணர்த்துமென்பது அறிஞர் யார்க்கும் ஒப்பமுடிந்தது. ஆனமா இறைவனோடு ஏகனாகி இறைபணி நின்று உள்ளத்தி[illegible] நின்று இறை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

ஒருமேகம் முகிலாகி ஒத்துலகந் தானாய்
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளுந் தானாய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க அந்தணர்கள் ஓதுநக ரெங்கும்
கருமேதி சேந்தாம ரைமேயுங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே

— சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

## புத்தகயா.

### பண்டித நேருவின் உறுதி.

இலங்கைப் பிரதமர் மிஸ்ரர். டி. எஸ். சேனநாயக்கா, பண்டிதர் நேருவைக் கண்டு இலங்கைவாழ் இந்தியர் பிரச்னை சம்பந்தமாகச் சம்பாஷித்து முடிந்தபின், புத்தகாயாப் பிரச்னை சம்பந்தமாகவும் பேசினாராம். புத்தகாயாப் பரிபாலனத்தில் இப்போதுள்ள அதிர்ப்தியான முறை தவிர்க்கப்படுமென்றும், அதனைப் பரிபாலிக்க ஓர் தர்மகர்த்தாச் சபையை அரசாங்கம் நியமிக்க ஆலோசனை செய்துவருகிறதென்றும், அதுவும் கூடிய சீக்கிரம் முடிவாகும் என்றும் பண்டிதர் நேரு மிஸ்ரர் சேனநாயக்காவுக்குத் தெரிவித்தாராம்.

இலங்கை-இந்திய மகாபோதி சங்கச் சார்பில், ஓர் தூதுக்கோஷ்டி பீஹார்ப் பிரதமர் [illegible] ஜத். கிருஷ்ணசிங்ஹா அவர்களையும் இவ்விஷயமாகக் கண்டதாம். இப்போது புத்தகயா மகந்தின் பரிபாலனத்தில் இருக்கிறது. அதனை மாற்றவேண்டும் என்று ஷெ தூதுக்கோஷ்டியினர் தெரிவித்தார்கள். கோவிற் பரிபாலனம் விஷயமாகக் கூடியசீக்கிரம் வேண்டிய சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படும என்று மீகார்ப் பிரதமர் தூதுக்கோஷடிக்குக் கூறினார் என்று தெரியக்கிடக்கின்றது.

## நேரு விஜயம்.

### இலங்கைச் சுதந்திரவிழாவிற்கு?

பண்டிதர் ஜவஹர்லால் நேரு, பிப்ரவரி மாதம் 4-ம் திகதி தொடக்கமாக இலங்கையில் நிகழும் சுதந்திரினக் கொண்டாட்டத்திற் பங்கு பற்றுவதற்காக விஜயம் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

இப்போது அநுராசபுரத்தில் இருக்கும் வெள்ளரச மரத்தைப் போல மிகவும் பிரக்கியாதி யடைந்துள்ள புத்தகாயாவில் உள்ள வெள்ளரசமரத்தின் கிளையொன்றையும் பண்டிதர் நேரு தாமே கொண்டு வந்து இலங்கைக்குப் பரிசாக அளிப்பார் என்று சொல்லப்படுகிறது.

பர்மாவின் சுதந்திரக்கொண்டாட்டத்தின்போது, ஷெ புத்தகாயா வெள்ளரசுக் கிளை ஒன்றைப் பண்டிதர் நேரு பர்மாவுக்கு அனுப்பியதும் ஈண்டுக்குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமம் (மூ. செல்வநாயகம்)

அருவமு முருவு மாகி
அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன னுலக முய்ய.

வெண்பா.

குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும் பிற்காத்ததுவும்
மெய்விடா வீரன் கைவேல்.

உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்காகத் தமது மூன்று தொழில்களையும் செய்வதற்காக இந்தியாவின் வடக்கே திருக்கயிலாசமலையிலே ஆதியு[illegible]மில்லாதவராகவும் இலங்கையின் தெற்கே கதிர்காமத்தில் ஜோதிமயமாகவும் எழுந்தருளியிருக்கின்றார்.

கதிர்காமத்தின்கண்ணே ஜோதியாக நின்று அருணகிரிநாதருக்கு முத்தியளித்த கருணையங்கடலாகிய கந்தப்பெருமான் பக்தர்களின் கனவில் தோன்றி உத்தரவைக் கொடுத்துத் தமது இருப்பிடத்துக்கு அழைத்து ஒவ்வொருவருடைய பக்குவத்துக்குத் தக்கவாறு வரப்பிரசாதத்தைக் கொடுத்துவந்தார். இப்போது அதிகமாக அவ்வாறு நடப்பதாகத் தோன்றவில்லை. அக்காலத்தில் உத்தரவுடன் சென்று கனத்த வரம் பெற்றார்கள் ஆனால், இப்போது உத்தரவின்றிக் கந்தரிடம் சென்று பிள்ளை வரத்துக்குப் போய்ப் புருஷனையிழந்த பார்ப்பாத்தி போலாகி விடுகின்றார்கள் எல்லாப் பிறவிகளிலும் முத்தியடையக் கூடியது மானிடப் பிறவி ஒன்றேயாகும். இவ்வருமையான பிற

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹு மார்கழி உரு உ வெள்ளிக்கிழமை

## யாழ்ப்பாணப் பிரிவிற் பயிரிடுந் தொழில்

I

இங்குள்ளவர்களின் உணவுக்குப் போதிய நெல்லை இவ்விய ழ்ப்பாணப் பிரிவிற்றானே ஆக்கிக் கொள்ளுதல் எக்காலத்தும் முடியாத கருமமாகும்; யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் உபயோகத்திற் காகிய நெல்லு இங்கு விளைவிக்கப்படுவதோடு, வன்னிப் பகுதியிலிருந்தும், கிழ்மாகாணத்திலுள்ள தம்பலகாமப் பகுதியிலிருந்து நெல்லும், பர்மாவிலிருந்து அரிசியும் நெல்லும் கடந்த யுத்தகாலத்திற்குமுந்திக் கிரமமாக வந்து சேர்ந்தன. யாழ்ப்பாணப்பகுதியிற் போதியநெல்லை விளைவிக்க முடியாமைக்குக் காரணம் இங்கே ஆறு ஏரி முதலிய நீர்வள மில்லாமையாகும்; எந்த நேரமும் மழையையே எதிர்பார்த்த நிலமாக இருப்பதனாற்றான் மாரிக்காலத்திலே வருஷ மொருமுறை இங்கே நெல் விளைவிக்கப்படுகிறது: ஆறில்லாவிடினும் வன்னிநாட்டில் இருப்பதுபோல, பெரிய ஏரிகள் இந்நாட்டில் இருக்குமானல் யாழ்ப்பாணத்திலே இருபோகமேனும் நெல்விளைவித்துக் கொள்ளலாகும். நீர்வளமுண்டாயின் யாழ்ப்பாண மக்கள் இடையறு ஊக்கத்துடன் விவசாயஞ் செய்யும் இயல்பு பூண்டவராவர்; இங்குள்ள மக்களின் இன்றியமையா உணவாகிய சோற்றுக்கும், இவர்கள் அந்நியநாட்டிலிருந்து வரும் அரிசியையும் நெல்லையுமே நம்பியிருப்பார்களானல், இவர்களுடைய வாழ்க்கை உணவு விஷயத்தில் எந்நேரமுஞ் சஞ்சல ாகவே முடியும்; இவைகளை உத்தேசித்துப் போலும் ஊரவர்கள் காலந்தோறுஞ் செய்த வேண்டுகோளினலும் தூண்டுதலினலும் உந்தப்பெற்று நமது அரசினர் யாழ்ப்பாணத்துள்ள வடமராட்சிப் பகுதியிலேமாரிக்காலத்திற் காணப்படும் நீர்நிலையை, கடல்நீர்வந்து புகாதபடி தடுத்து, காலந்தோறும் பெய்யும் மழை வெள்ளம் வந்து சேர்ந்து அந்நீர் வாவியாகுதற்கான முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர்; இதற்கென அரசிறை வருவாயில் ஒருபெருந்தொகைப் பணம் பிரத்தியேகமாக விடப்பட்டிருக்கிறது; தொண்டமானாற்றைச் சேர்ந்த செல்வச்சந்நிதிக் கணித்தாக, இக்கருமப் பார்க்கும் உத்தியோகத்தர்களும் காரியஸ்தர்களும் தங்குதக்காகிய கொட்டில்கள் அமைக்கப்பட்டுவிட்டன; ஆனல் தொடங்கிச் செய்யப்படவிருக்கும் சுத்தநீர்ப்பரவையமைத்தலாகிய இக்கருமம் துரிதமாக நடைபெறுமா இல்லையேற் காலதாமசமாக நடைபெறுமோ என்பதுதான் இருந்தறியவேண்டியது; இந்த நீர்நிலை விஷயமான கருமத்தை அதிகாரிகள் மிகத் துரிதமான முயற்சியோடு செய்விக்கத் தொடங்கினலும், இது நிறைவேறுதற்கு ஏழெட்டு ஆண்டுவரையிற் செல்லுமென அநுபவஸ்தர்கள் சொல்லுகிறார்கள்; அங்ஙனமின்றித் தாமச குணத்தோடு செய்யப்படின் இதுநிறைவேறுதற்கு ஒரு சந்ததி கழிதற்காகிய காலம் வேண்டு மெனலாம்; ஆனதால் யாழ்ப்பாணத்திற்குரிய பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் பிரதானமாக இந்த முயற்சிகள் விரைவில் நிறைவேறும் வண்ணம் காலந்தோறும் அரசினரை ஞாபகப்படுத்தி ஊக்குதல்வேண்டும்.

நெற்பயிருக்கு அடுத்ததாக யாழ்ப்பாணமக்கள் அதிக ஊக்கத்துடன் பணஞ் செலவிட்டுச் செய்யும் பயிர் புகையிலை யெனலாம்; இப்புகையிலை உணவின் பொருட்டு ஆக்கப்படுவதன்று; பொருளாதாரத்தை யுத்தேசித்து ஆக்கப்படுவதாகும்; யாழ்ப்பாணத்தவர் பலவருடங்கட்கு முந்திப் புகையிலையை அதிகமாகச் செய்துவந்தன ரெனினும், அதனல் அவர்கள் அதிகமான லாபத்தை அக்காலத்திலே தாங்கள் அடைந்திலர்; காரணம் அக்காலத்திலே புகையிலை ஆக்குவோர் ஏழைகளானதால், அவர்கள் எருவிடல் பண்படுத்துதல் முதலிய கருமங்களின் பொருட்டு அந்தக் காலத்தில் இங்கு அதிகமாக வந்திருந்த நகரத்தா ரெனப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டிப்பிள்ளைகளிடத்திலும், இங்குள்ள சில தனவந்தர்களிடத்திலும் பணத்தைக் கடன்பட்டு வாங்கிப் புகையிலை செய்துவந்தார்கள்; அப்படிச் செய்த அவர்கள் தங்கள் புகையிலையைவெட்டி உலர்த்திப் பதப்படுத்தி விற்பதற்கிடையில் அவர்களுடைய புகையிலை விற்பதால்வரும் பணமும், தாங்கள்பட்ட கடனின் முதலும் வட்டியும் பெரும்பாலும் ஒத்த தொகையாய்விட, தாங்கள் புகையிலை விற்றுப் பெற்ற பணம் முழுவதையுங்கொண்டு கடன் தீர்த்துவிட்டு, வெறுங் கையினராய் தங்கள் சொந்தச் செலவிற்கு அற்பபணமேனும் எஞ்சப்பெறாராய் மனைவி மக்களுடன்திண்டாடிய நேர்வுகளை நாம் அறிவோம்; புகையிலைத் தோட்டஞ் செய்வோருட் சிலர் தாம் பட்ட கடனைத் தீர்ப்பதற்குப் புகையிலைவிற்றபணம் போதாமை கண்டு, தம் நிலத்தையும் ஈடுவைத்துக் கடன்தீர்த்துவிட்டுப் பின் பிழைக்க வகையறியாது அல்லற்பட்டதையும் அறிந்துள்ளோம்; ஆனல் அப்படிப்பட்ட தனிகர்களாகிய செட்டிமாரும் ஊர்த் தனவந்தர்களும் ஒழிந்துபோக, இக்காலத்திலே புகையிலை ஆக்குவோர், ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாகப் பெரும்பாலும் பணம்பெற்றுப் புகையிலை விளைவித்து விற்றுக் காலந்தோறுந் தங்கள் கடனையுந் தீர்த்து எஞ்சிய பணத்தைக் கொண்டு நல்லமுறையில் வாழ்கின்றார்கள்; இவ்விஷயத்தில் யாழ்ப்பாணப் பிரிவிலே இடங்கள்தோறும் உள்ள ஐக்கிய சங்கங்களை நாம் பாராட்டுகின்றேம்.

இந்த அரிசிக் கட்டுப்பாட்டோடு கூடிய பஞ்ச காலத்திலே யாழ்ப்பாண மக்களுக்குப் பிரதான உணவுப்பொருள்களாகப் பயன்பட்டுவருவது மரவள்ளிக்கிழங்கெனலாம்; முந்தி இக்கிழங்கினை அதிகம் விருத்திபண்ணுது வருவாயற்றதென அலட்சியஞ் செய்த யாழ்ப்பாணத்தவர், இப்பொழுது இயன்றவரையில் அதிகமாக மரவள்ளியை விருத்தி செய்து வருகின்றார்கள்; மரவள்ளி அதிக உவர்த்தன்மையோடுகூடிய நிலந்தவிர ஏனைய நிலங்களில் இட்டுப் பயன்பெறத்தக்கது; வீட்டு வளவுகளிலும் பயன்தரத் தக்கது; வருடம் முழுவதும் மரவள்ளிக்கிழங்கு இங்கு ஆக்கப்பட்டு விலையாக, மக்களும் வாங்கியுண்டு வயிறு வளர்க்கின்றனர்; கூப்பன் முறைப்படி கொடுக்கப்படும் அரிசி கோதுமைமா என்னும் இவைகளின் குறையை ஒருவாறு நிரப்புவது மரவள்ளிக்கிழங்கெனல் மிகையாகாது.

## அவதூறு செய்ததாக

### ஐ. தே. க. பத்திரிகைமீது குற்றச்சாட்டு

இலங்கைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் நியமன அங்கத்தவராகிய மிஸ்ரர் கிறேஷியன், சிறை விதிக்கப்பட்ட பாராளுமன்றத்தவர் மிஸ்ரர் பிலிப் குணவர்த்தனவின் வழக்கை நடாத்த ஏற்பட்டவர். அவர் லண்டன் உயர்தர நீதிமன்றம்வரை சென்று வாதிட்டார். இப்போது அரசியற் குற்றங்களுக்காகச் சிறைசென்றவர்கள் பாராளுமன்றத்திலே அங்கத்துவம் வகிக்கக்கூடாது என்ற பிரமாணத்தை நீக்கவேண்டும் என்று அவரும் இன்னும் சிலரும் பிரதிநிதிகள் சபையில் ஓர் தீர்மானம் எடுத்தாளவும் இருக்கிறார்கள், இப்படியாக எல்லாம் இவர் செய்தமையைக் கண்டித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையும் சிங்களப் பத்திரிகையும் அவருடைய செயலுக்குவிபரீதநோக்கமுங்கற்பித்திருக்கின்றன. இதனை மிஸ்ரர் கிறேஷியன் பிரதிநிதிகள் சபை சென்ற புதன்கிழமை கூடியபோது சபைத்தலைவர் மிஸ்ரர் மொலமூரேக்குத் தெரிவித்தார். மேற்படி பத்திரிகைகளின் கட்டுரைகளைத் தாம் படித்துப் பார்த்ததாகவும், அவை எழுதியமைஓர்பிரதிநிதியின்சுயமரியாதைக்குப் பங்கம் விளைக்கும அவதூறாகவேயிருக்கிறதெனத் தாம் கருதுவதாகவும் மிஸ்ரர் மொலமூரே கூறினார். குறித்த பத்திரிகைகள் விஷயமாக விசாரணை புரிந்து ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க, பிரதிநிதிகள் சபைத் தலைவர், திருவாளர்கள் R. S. S. குணவர்த்தன, H. R. U. பிரேமச்சந்திரா, ச. கனகரத்தினம என்பவர்களைக்கொண்ட ஓர் சபையை நியமித்திருக்கிறார்.

## சிங்கக்கொடி!

### அதுதான் தேசீயக்கொடி

இலங்கையின் தேசீயக்கொடியாகச் சிங்கக்கொடியே யிருக்கவேண்டுமென்று, மட்டக்களப்புப் பிரதிநிதி ஜனுப் சின்னலெப்பை, வருகிற வெள்ளிக்கிழமை ஓர் தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் எடுத்தாளுவரர்.

தேசீயக்கொடி விஷயமாக எதிர்க்கட்சியினர் எத்தகைய கொள்கையைக் கடைப்பிடிப்பதென்பதைப் பற்றித் தீர்மானித்தற் பொருட்டு எதிர்க்கட்சியினர் கூட்டம் ஒன்று சென்ற புதன்கிழமை நிகழ்ந்தது. சமசமாஜிகள் இதுவிஷயத்தில் நடுவுநிலைமை வகிப்பராம். சமதர்மிகள் தத்தம் எண்ணப்படி செய்வராம். போல்ஷெவிக்லெனின் கட்சியினர் இனித்தான் அதைப்பற்றி முடிவு செய்வராம். தமிழ்க் காங்கிரஸ்வாதிகள் சிங்கக் கொடியே தேசீயக் கொடியாவதற்கு எதிராக நின்றனராம்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—46)

### "அக்கா, இது என்ன கோலம்"

வீட்டிற்கு வந்தவர்களைப் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் ஸ்நானஞ் செய்வித்து உணவருந்தி அன்புடன் உபசரித்தார்கள்; சிவபாக்கியமும் முகமலர்ச்சியோடு காணப்பட்டாள்; "பிரிந்தவர் கூடிடிற் பேசவேண்டுமோ" என்றல்லவா பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்; அவர்களுடைய வரவை எதிர்பார்த்திருந்த சாமியாரும் அங்கே வந்து அவர்களிடத்தில் அன்புபாராட்டி உடாடினார்; சற்றுநேரஞ் செல்ல, பாக்கியலட்சுமி சிவபாக்கியத்தைத் தன்னுடைய அறைக்குட் கூட்டிக்கொண்டு போனாள்; தனபாக்கியமும் அவர்களுடன் அந்த அறையுட் சென்றாள்; இருவரும் ஒரு சோபாவில், சிவபாக்கியத்தை மத்தியில் இருத்திக்கொண்டு இரண்டருகிலும் இருந்தார்கள்; பாக்கியலட்சுமி சிவபாக்கியத்தின் முதுகைத் தடவியபடி, கவலையோடு கூடியவளாய் "அக்கா இது என்ன கோலம்? நீங்கள் ஊணுறக்கமின்றிக் கவலையோடிருக்கிறீர்களென்பதை அண்ணா எனக்கு எழுதிய கடித மூலமாக அறிந்துதான நான் உங்களுக்கு, இங்கு சிலநாள் வந்து தங்கப்போம்படி கடிதமெழுதினேன்; எல்லாமறிந்த நீங்களும உலகத்திலுள்ள சாமானிய பெண்கள்போல் இப்படிக் கவலைப்பட்டாற் செய்வதென்ன அக்கா, நான கவலைகொண்ட சமயத்தில் எனக்கு எத்தனையோ புத்திகளைச் சொல்லி என்னைத் தேற்றிய நீங்களே இப்படிக் கவலைகொண்டு ஊணுறக்கந் துறந்து தேகமெலிவடைந்தாற் செய்வது என்ன? அக்கா" என்று கவலையோடு பரிவுடன் சொன்னாள்; மனம வருந்துந் தங்கையைச் சிவபாக்கியம கவலைப்படவேண்டாமெனச் சொல்லி, "தங்காய், என் விஷயமாக எனக்கு எள்ளளவுங் கவலையில்லை; எங்கள் அருமையான அண்ணையிட்டுத்தான் எனக்குத் தீராக்கவலை. அவர் எங்கள் தனபாக்கியத்தைத் தாரமாகக் கொண்டு இல்வாழ்க்கையை இனிது நடத்திவருவாரானல் எனக்கு என்ன கவலை தங்கைச்சி" என்று சொல்லுவதற்கிடையில், அருகிலிருந்த தனபாக்கியம் நாணமீதூர மெல்ல எழுந்து அந்த அறையைவிட்டுப் புறத்தே போக முயலுதலும், சிவபாக்கியம் அவளுடைய கரத்தைத் தன கரத்தாற் பற்றிப் பழையபடி பக்கலில் இருத்தி "எங்கேயம்மா, ஓடப்போகிறீர்; எங்களிடம் வந்து சேர்ந்தபின் தப்பியோட முடியுமா, உம்மையொளித்து எங்களுக்கு ஒரு இரகசியமுண்டா," என்று கனிவுடன் சொல்ல, தனபாக்கியம் தலைகுனிந்தபடி பக்கலில் இருந்தாள். இதுதான் என் மனக்கவலைக்கும தேகமெலிவிற்குங் காரணம்" என்று சொல்லிமுடித்தாள் சிவபாக்கியம: கேட்ட பாக்கியலட்சுமி சிந்தனையோடு கூடியவளாய்த் தன் தமக்கை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிச் செய்வது என்ன?

## நேரடிப் போராட்டம் — கடைசிமுடிவு

ஸ்ரீதரன்

II

இலங்கை மக்கள் பெறும் வருமானத்தில் சமத்துவம் இருக்கவேண்டும் என்று முன்னர்க் கூறினேன், இன்று ஓர் அநியாயச் சமூகமுறை அமைப்பினல், ஓர் சிலர் குபேரசம்பத்துப் படைக்க, லட்சக் கணக்கானோர் நித்திய தாரித்திரிய நிலையில் உழலுகின்றனர். இந்த அமைப்பு முறையினலேயே நாட்டிற் களவு, கொலை, மதுபானம் சூதாட்டம் முதலாம் தீமைகள் நிகழுகின்றன. ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்:— ஓர் கிராமத்தில் ஓர் பெரிய உத்தியோகத்தர் வசிக்கிறார். அவருடைய வீட்டுக்கருகே சாதாரண தொழிலாளி வசிக்கிறான். இரண்டு வீட்டுக் குடும்பங்களும் ஒருவர் நடைவடிக்கையை மற்றவர் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. பெரிய அரசாங்க உத்தியோகத்தர் மோட்டார் ரதத்தில் தம் காரியாலயத்திற்குச் செல்லுகிறார் காற்சட்டை மேற்சட்டைகளை அணிகிறார். கிழமைக் கொருமுறை துணிகளைச் சலவை செய்வோன் அவர் வீட்டுக்கு விஜயஞ் செய்கிறான். பால் போன்ற வெண்ணிற உடைகளை அவரும் அவர் மனைவி மக்களும் அணிகின்றனர் கிழமைக்கிருமுறை மனைவி மக்கள் சகிதம அவர் சினிமாப் பார்க்கச் செல்லுகிறார் அவருடைய பிள்ளைகள் முகத்திற் புர்மா அணிந்து, நறுமணம் வீசும் சுகந்த திரவியங்களால் தம்மைக் கமழச் செய்கிறார்கள். காலையில் படுக்கைவிட்டெழுமுன் தேனீர்; படுக்கைவிட்டெழுந்ததும் காப்பி; பல் விளக்கி முகம் அலம்பியபின் அறுசுவையுண்டி: இப்படியாக அவர்கள் ஆனந்தமான சீவியம் நடத்துவதை அடுத்தவீட்டுத் தொழிலாளி மனைவி அவதானிக்கிறாள். அந்தத் தொழிலாளியின் பிள்ளைகளும் அவதானிக்கிறார்கள். உத்தியோகத்தன் மனைவி. தான் பார்த்த பயஸ்கோப் காட்சிகளைத் தொழிலாளி மனைவிக்கு வர்ணிக்கிறாள். உத்தியோகத்தன் மக்கள் தாமநுபவிப்பதைத் தொழிலாளியின் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்கிறார்கள். தொழிலாளியின் மனைவி மக்களுக்கு ஓர் அங்கலாய்ப்பு. பயஸ்கோப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே; காரில் ஏறிச் சவாரி செய்ய வாய்க்கவில்லையே. கோதுமை அப்பத்துடன் பழப்பாகும் வெண்ணெய்க் கட்டியும் சேர்த்துத் தினக் கொடுத்துவைக்கவில்லையே என்று அத் தொழிலாளி மனைவி ஏங்குகிறாள், தானும் பொன் காய்க்கும் மரம்போல ஆபரணங்களணியாது இருக்கநேர்ந்ததே என்று பெருமூச்சு விடுகிறாள். அவள் தன் தலைவிதியை நோகிறாள். ஆனால் இந்தத் தொழிலாளியின் வயிற்றிற் பிறக்கப் பாவம் செய்துள்ள பிள்ளைகளுக்குத் தலைவிதியைப் பற்றியாவது மண்ணாங்கட்டியைப் பற்றியாவது தெரியாது. அடுத்தவீட்டு முதலியாரின் பிள்ளைகள் பயஸ்கோப்புக்குச் சென்றால், தாம்ஏன் போகக்கூடாது என்று எண்ணுகிறார்கள் தங்கள் தகப்பனை நெருக்குகிறார்கள். உலகத்திலே பெறுதற்கரியது புத்திரபாக்கியம்' தன் புத்திரர் கவலைப்படுவதைக்கண்டு எந்த ஏழையும் சகிக்கமாட்டான். கண்ணீரைத் துடைக்கிறான், 'மக்காள் நீங்களும் பயஸ்கோப் பார்க்கலாம்'' என்கிறான். அதற்கான வழிவகைகளைத் தேடுகிறான். அவனுடைய மாதவருமானமோ இத்தகைய செலவுகளுக்குப் போதாது; ஏன், கூப்பன் பொருள்கள் வாங்கவே போதாது: அப்படிப்பட்ட அவன் தன் பிள்ளைகளின் அபிலாஷையைத் தீர்க்க எவ்வாறு பணம் சம்பாதிப்பான். அவன் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டால், நாம் ஆச்சரியப்படுதற்கில்லை. உலகிலே, எவனாவது வேண்டுமென்று திருடுவதில்லை. அப்படித் திருடுங்கால் அகப்படவேண்டும், சிறைச்சாலை புகவேண்டுமென்று ஆசைப்படுவதில்லை. கேவலம், வறுமை தாங்காமலேயே, இந்த அநியாயச் சமூகஅமைப்பில் ஏற்பட்டுள்ள செலவுகளைச் சரிப்படுத்தவே அவன் களவு தொழிலில் ஈடுபடுகிறான் களவு தொழில் உலகிற் குறையவேண்டுமானால், சமூக அமைப்புமுறை மாறவேண்டும். ஒருவன் செல்வந்தனாக இருக்க, மற்றவர்கள் தரித்திரத்தில் இருக்கும் கொடிய சமூக அமைப்பு முறை மாறவேண்டும். இது தான் மூலாதார உண்மை. இதனை அறியாத முதலாளித்துவ அரசாங்கம் களவு தொழிலைக்கெடுக்க நீதிஸ்தலங்களைக் கட்டிவைத்திருக்கிறது. நீதிபதிகளையும், நியாயவாதிகளையும் நியமித்து வைத்திருக்கிறது. பொலிஸ்படையை வைத்திருக்கிறது சிறைச் சாலைகளை அமைத்திருக்கிறது இவை எல்லாம் பேய்த்தனமான கருமங்கள். மூலவேரை வெட்டவேண்டும், அந்த மூலவேர்தான் இப்போதைய சமூக அமைப்பு முறை.

தம் பொருளாதாரக் கவலையை மறப்பதற்காகப்பலர் மதுபானம் செய்வதை அறிவேன். உணவுக்கு வழியில்லாதபடியால் வயிறு நிறையக் கள்ளுக் குடிக்கும் தொழிலாளரை நான் அறிவேன். இப்படியே சூது கொலை முதலிய குற்றங்களுக்கும் இப்போதைய பொருளாதார நிலையே, ஈனமான சமூகஅமைப்பு முறையே காரணம் என்று நிரூபித்துக் காட்ட முடியும்.

III

எமது பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் அந்த மன்றத்துக்குத் தம்மைத் தெரிவித்து அனுப்பியது எதற்கு? தாம் மாத்திரம் 600 ரூபா வேதனமாகப் பெறுவதற்கல்ல என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துக்கொள்ளுதல் வேண்டும்; பொதுஜனங்களுக்கு உண்மையான சேவைசெய்யும் ஓர் சாதனமே பாராளுமன்றம். அதன்மூலம் சேவைசெய்யலாம் என்றே அங்கு சென்றனர். அப்படி அவர்கள் அங்கே போயும் எவ்விதமான சேவையும் செய்ய முடியாவிட்டால், அவர்கள் ஏன், அங்கே அப்பதவிகளில் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்று கேட்கிறேன். எங்கள் பிரதிநிதிகள் ''நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது அங்கே செனநாயக்காக் கட்சிதான் ஆதிக்கத்தில் இருக்கிறது; நாங்கள் கொண்டுபோகும் விஷயங்கள் செவியில் ஏறவில்லை'' என்ற சாக்குப்போக்குக் கூற முடியாது. தம் லட்சியத்தைச் பூர்த்தியாக்க முடியாது என்று கண்ட அந்தக் கணமே, இவர்கள் பதவிகளைத் துறந்து வெளியேறுதல் வேண்டும் இவர்கள் அங்கேயிருந்தும் பயனில்லை: இல்லாமல் விட்டாலும் பயனில்லை: ஆகவே, இவர்கள் இல்லாமல் விடுதலே மேல்: இவர்கள் வெளியே வரல்வேண்டும். தேசமக்களுக்கு உள்ளநிலைமையை விளக்கவேண்டும். சாத்வீகப் போராட்டத்துக்கு ஆயத்தம் செய்தல்வேண்டும் அதிகாரவர்க்கத்தை நேர்முகமாக எதிர்த்துப் போராடி எம் உரிமைகளைப்பெற நாம் கருமம் ஆற்றவேண்டும். எம் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் இவ்விஷயத்தலை தலைமைதாங்கி நடத்தவேண்டும். இதனை விடுத்து, மாதம் ஒருமுறையோ மூன்று மாதத்துக்கொருமுறையோ கூட்டங்கள் கூட்டி, ஊர்வலமாகப் பவனி வந்து மலர்மாலைகள் அணிவித்து, ஒலிபரப்பிக் கருவிகள் அமைத்து, அவற்றுக்கு முன்னால், சண்டமாருதப் பிரசங்கம் செய்ய கேட்பவர்கள் கரகோஷம் செய்வதால், நாம் எம்முடைய உரிமைகளை ஒருபோதும் அடையமாட்டோம் என்பது திண்ணம். இப்படியான படாடோபப் பிரசங்கங்களைச் செய்பவர்கள், தங்களையும் ஊரவர்களையும் ஏமாற்றுகிறார்கள்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறப் போராட்டத்தில் இறங்கவேண்டும். அதிகாரவர்க்கத்தின் சிறைக்கூடங்களை நிரப்பவேண்டும். அரசாங்கம் நடைபெறுவதில் ஒத்துழைத்து நாம் கண்ட பயன ஒன்றுமில்லை எனவே, அதனுடன் ஒத்துழையாமல் விடுவதால் அதிக தீமை வரப்போவதில்லை. வெளியில் மக்கள் பட்டினியால் வாடுவதிலும் பார்க்க, அதிகார வர்க்கத்தின் சிறைக்கூடத்தில் உப்பும்சோறும் உண்பதுமேல். இப்படியான நேரடிப் போராட்டத்திற்குத் தலைமைதாங்கி நடாத்த நம் தலைவர்கள் தயாரா? அல்லது இன்னும் வழவழா நியாயம்பேசிக் காலங்கழிக்கத்தான்போகின்றனரா என்று கேட்கிறேன்.

## "புயல்"

வெட்டொன்று துண்டு இரண்டு என்னும் வாதம்; விறுவிறுப்பான வசனநடை, பரந்த அரசியற்கொள்கைகள், சிறந்த சமரசஞானம் என்பவற்றைப் படிக்கவேண்டுமானால், இப்போது சென்னையில் தோன்றியிருக்கும் ''புயல்'' பத்திரிகையைப் பார்க்கவேண்டுமென்பதே எனது அபிப்பிராயம். பாரதநாட்டில் வகுப்புவாதத்தை விரட்டிக் கலைத்து, அபேதவாதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்து தொழிலாளர் உஜ்ஜீவனத்துக்கு மார்க்கம் தேடுவதே ''புயலி''ன் நோக்கம் என்று தெரிகிறது.

''புயலி''ன் நிர்வாக ஆசிரியராக தென் இந்தியப் பிரபல அபேதவாதி எஸ். ஏ. ரஹிம் இருப்பது ஓர் நல்ல உற்பாதம் என்றே கருதுகிறேன். அவருடைய வழக்கமான, இயல்பான, துடுக்கான வசனநடை புயலின் முதலாம் இதழை அலங்கரித்திருக்கிறது.

''புயல்'' தனிப்பிரதி விலை 1 அணா: இலங்கையில் 10 சதம்: பத்திரிகையை நேரே பெறவிரும்புவோர், ''புயல்' காரியாலயம் 3/16 மவுன்ற் றோட், சென்னை என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம். —ஸ்ரீதரன்.

# ஈர நெஞ்சினர் வீரம்

( வித்துவான் க. வேந்தனார் அவர்கள் பரமேசுவரக் கழகம் )

( முற்றொடர் )

இவர்களன்றோ துறவிகள், தவமுனிவர்கள் இவர்களால் புதிது புதிதாக ஆய்ந்து கண்ட கலைகளின் பெறுபேற்றை நாம் நன்கு பேணவேண்டும். அதுவே வழிபாடு, மீண்டும் மீண்டும் அக்கலைகளை ஆய்ந்து இன்னும் புத்தம் புதிய முடிவுகளை உலகினர்க் குதவவேண்டும் இதுவே காதல் (அன்பு) இங்ஙனம் அக்கலைகளை வழிபட்டுக் காதலித்துச் செயலினால் (தொண்டால்) தெளிப்படுத்துகின்றவர்களே தெய்வத் தொண்டர்கள் தம்நலமற்ற வீரத் துறவிகள் - ஈரநெஞ்சினர் இவர்களினாலேயே உலகம் புதுமைப் படைப்பைப் பெறுகின்றது. முன்னேறுகின்றது. இவ்வாறு சிறந்துவிளங்கும் கலைத்தெய்வ வழிபாட்டைக் கருத்தின்றிப் போலிக் கட்டுப்பாடுகளால் அகப்படுத்தி அதன் கலைப் பண்பைச் சிதைக்கும் புல்லியர் கூட்டம் ஒழியவேண்டும். புதுமை எழில் வீசும் ஆய்வுப் புலவர்கள் கலையாக்கம் கருதி உழைக்கவேண்டும். தெய்வ வழிபாட்டின் மாண்பு எங்கும் பரவவேண்டும். அதுவே கலைவழிபாடாகும்,

இத் தெய்வக்கலை அமிழ்தை நுகர்தற்கு எம்மை அடியார்கள் ஆற்றுப்படுத்துகின்றனர். அவர்களின் ஈரநெஞ்சில் வேறுபாடற்ற உண்மைப் பண்பு ஒளிவிடும். ''அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன்'' என நம்பியாரூரர் அன்புடன் உலக மக்களை அழைக்கின்றார். என்னைப்போல் நீங்களும் இன்பம் அடைந்து வழவேண்டும் என்கின்றார். தென்னாட்டின் எல்லைக்குள்மட்டுமே சிவவழிபாட்டின்பம் அடங்கவில்லை. எந்நாட்டினும் உண்மை உள்ளவர்கள் இருக்கின்றனர். உண்மைப் பொருள் எவர்க்கும் உரிமை உடையதென்னுங் கொள்கையை அடிகளார் வலியுறுத்துகின்றார், மாணிக்கவாசகர் ''தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்'' என்கின்றார். தாயுமானவ முத்திகளுந் தெய்வ நலனைக் காண்பதற்குச் சோவாரும் செகத்தீரே என ஆரமையோடு எம்மை அழைக்கின்றார் இவர்களின் நெஞ்சந்தான் தெய்வப்பண்பு சுரந்து கனியும் ஈரநெஞ்சம். இவர்களே அன்புத் தொண்டர்கள், தாங்கள் பெற்று நுகரும் ஆராவின்பத்தினைப் பிறர்க்கும் அறிவுறுத்தி அழைக்கின்றனர் இவர்களையே ''ஈரநெஞ்சினர் யாதுங் குறைவிலார் வீரம் என்னால் விளம்புந்தகையதோ'' எனப் பாராட்டுகின்றனர். ஈர நெஞ்சினர் வீரந்தான் இன்றைய உலகையும் இனிவரும் உலகையும் ஆக்கும் ஆற்றல் வாய்ந்தது அருளோடு கலந்தது அறிவுச் செல்வத்தை—ஆய்வுக் கலைகளை அளிக்க வல்லது. அன்புந் தொண்டும் ஆண்மைப் பண்புடன் கலந்து அலைபெறுவது. அவர்களின் கொள்கைகள் இன்றைய உலகில் பெரிதும் வெற்றி பெறுகின்றன. அறிவின் விருந்தே இனி உலகத்தை ஆட்சி புரியும். அதன் மங்கல முரசு ஒலிக்கின்றது. உரிமைக் கொடி வானில நிழலிடுகின்றது. வாழ்க ஈர நெஞ்சினர் வீரம்!


## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்


## குருபூசை

தெல்லிப்பழை தெமே பொற்கலன் தம்மை வவிரவர் கோவிலில் வித்தகன் சேவா சங்கத்தாரால், பொதுசனங்களின் ஆதரவோடு 2-1 48 வெள்ளிக்கிழமை இரவு 6 மணியளவில் மேற்படி நாயனார் குரு பூசையும், சைவத்திருவாளர் பொ. கருணாகரர் அவர்களின் தலைமையில் பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களால் சைவத்தின் மாட்சி என்னும் பொருள்பற்றியும், பண்டிதர் M. மாணிக்கனார் அவர்களால் இயற்பகை நாயனார் எனனும் பொருள் பற்றியும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. பின்பு தலைவரவர்கள் பெரிய புராண மகிமையைப்பற்றிப் பேசி நாயனார் சரித்திரம் பேசியவரும் சேக்கிழார் சுவாமிகள் கூறியாங்குப் பக்திச்சுவை கனியப் பேசியதைவிதந்து பாராட்டினார். காரியதரிசியின் நன்றியுரையுடனும்தேவார பாராயணத்துடனும் கூட்டம் இனிதே நிறைவேறிற்று. கடித


# திருவருட்பயன்

சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. வகுப்புகளுக்குச் சமய பாடமாக விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அணா 12 )

# திருக்குறள் முதல் 20 அதிகாரம்

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழி பெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றுடன்

விலைசதம் 75 (அணா 12)

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும், பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வியை யெடுத்த மானிடர் அரும் பெரும் ஜோதியாய்க் கதிர்காமத் தின கண்ணே காட்சியளித்துக் கொண்டிருக்கும் கந்தக்கடவுளை அடைவதற்கு, இவ்வுலக வாழ்வு பொய்யென்று நினைத்து அதிலுள்ள பற்றெல்லாவற்றையும் விட்டு ஒரு மனப்பட்டுச் செல்லவேண்டும். கந்தக்கடவுளைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் குறைவில்லாமல் ஒரு தன்மையராய் வாழ்வார்கள். ஆதலால் புலன்வழியே போகாமல் அப்பனின் திருவடிகளையே எக்காலமும் நினைத்து மற்றயாவையும்விரும்பார்கள், தந்தை தாய் தமர் தாரம் இவை யாவையும் கடவுளாக மதித்து, நான, எனது, பாசம் என்றதையெல்லாம் விட்டுப் பழவடியாரோடுங் கூடிக் கந்தக்கடவுளின் திருவுள்ளக் குறிப்பையே உறுதியாகப் பற்றி, இல்வாழ்வு பொய்யென வுணர்ந்து அதைப் பற்றாமல், அவனின் பொன்னடியை யடைந்து உய்வதற்கு ஒருமனப்படவேண்டும். அடியார்கள் விளையாட்டை விட்டு கடவுளுடைய திருவடியைச்சேர்ந்து அவரது திருவுளக் குறிப்பை உறுதியாகக் கொண்டிருந்தால், இனிமேல் பிறவியெடுக்க விடாமல் தடுத்தாட்கொள்வர். முருகா! முருகா! வென்று முருகக்கடவுளின் மலரடியை எப்பொழுதும் தியானித்தால் அருச்சனை செய்தால், புகழ்ந்தால் தொல்லைகள் வருந்தாமல், இனி இடையூறொன்றும வாராமல் கதிர்காமம் சென்று பெருமானை வணங்கி அடியார்முன் நெஞ்சுருகி நிற்கவேண்டும். சண்முகனின் பேரின்பத்தை அனுபவிக்கும் பேறுபெற்றவர்களே மயங்கிப் பின் துன்பத்தால் அவதிப்படாமல், திருக்கதவு திறந்திருக்கும்போதே சரவணத்துச் சென்று மலரடியைச் சேர்வார்கள். சூரசம்மாரச் சுப்பிரமண்யரை அடைவதற்கு மனத்தைப் பக்குவமாக்கித் தியானித்து அவரது அருள்முகத்தைப் பானம் பண்ணி பேரன்புக அதில் மூழ்கி, பிரபஞ்சத் தொல்லைகளில் விழுந்துபுரளாமல் பற்று வைக்கவேண்டும். கந்தக் கடவுளைப் புகழ்ந்து தொழுது இன்றே ஆட்படாதவர்கள், பின்னால் மதிமயங்கி மாழ்வார்கள். வெறும் மதியார். புத்தி தெளிந்து உய்யவேண்டுமானால் முன் சொன்னதுபோல் செய்யவேண்டும் அன்றேல் இறைவனது அருளைப் பெறமுடியாது.

பக்தி இல்லாமல் முத்தியடைய முடியாது பக்தியுடனும், உத்தாவுடனும் கதிர்காமத்துக்குச் சென்றால் ஒருவிதமான கஷ்டமும் கவலையுமில்லாமல் கந்தனின கருணையைப் பெற்று உய்யலாம் அதைவிட்டு பக்தியில்லாமலும், உத்தாவில்லாமலும் கதிர்காமத்துக்குச் சென்றால் கஷ்டமும் கவலையும் அடைய நேரிடுமன்றி கருணையும பெறமுடியாது. தமிழர்கள் இதை அறிந்திருந்தும் குருடர்போன்று கதிர்காமத்துக்கு வேடிக்கை பார்க்கவோ அல்லது மற்றவர்களுக்கு நானும் கதிர்காமத்துக்குப் போனேனென்று காட்டுவதற்காகவோ போய்ப் பாவத்தைச் சேகரிக்கின்றார்கள். உத்தாவுடன் கதிர்காமத்துக்குப் போகவேண்டுமென்று அறியாத சிங்களச் சகோதர சகோதரிகள் பயத்துடனும், பக்தியுடனும் கந்தக்கடவுளைத் தெரிசித்து விபூதி தரிப்பதும், தீர்த்தம் அருந்துவதும, ஆவேசத்துடன் காவடி யெடுப்பதும் பார்ப்பவர் மனதைக் கவர்வதானால் கந்தக்கடவுளின் உள்ளம் எவ்வாறிருக்குமென்று கூறமுடியாது தமிழ் ஆடவர்களும் பெண்மணிகளும் தம இஷ்டம்போல்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# திருச்சி ரேடியோ

வெள்ளி ஜனவரி 9

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 என் வி ருக்மிணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 கே ஆர் கிருஷ்ணசாமிராவ் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 என் வி ருக்மிணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 என் வி ருக்மிணி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 30 முடிவு

மாலை 5 கல்விடைக் குறிச்சி ஏ பாலசுப்பிரமணிய பாகவதர் பாட்டு 5 40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாரூர் எஸ் வைத்தியநாதன் நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 தவிர்க்க முடியுமா? 8 கல்விடைக் குறிச்சி ஏ பாலசுப்ரமணியபாகவதர் பாட்டு 8 30 திருவாரூர் எஸ் வைத்தியநாதன் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப் பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

சனி ஜனவரி 10

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 என் காந்திமதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 பவானி வி ஸ்ரீனிகண்டன் வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 பவானி வி ஸ்ரீகண்டன் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 15 திருவிழிமிழலை எஸ் கலியாண சுந்தரப்பிள்ளை பாட்டு 2 45 முடிவு

மாலை 5 திருவிழிமிழலை எஸ் கலியாண சுந்தரம்பிள்ளை பாட்டு 5 40 நம்மாள்வார் பாசுரவிளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் காந்திமதி பாட்டு 7 15 தவிர்க்கமுடியுமா? 7 30 தமிழில் செய்திகள் 7 45 வி துரைசாமி ஐயங்கார் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 விதார் வீணை 10 இசைவேளை இசைததட்டு 10 30 முடிவு

ஞாயிறு ஜனவரி 11

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 மாயவரம் கே என் பக்கிரிசாமி பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 எம் கே கனகாம்பாள் வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 இலவச சிகிச்சை நாடகம் 12 40 காந்தாமணி புதிய மெட்டுகள் 12 45குழந்தைவிசாரணை 12 50 பொற்கிழி இசைச்சித்திரம் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சேலம் ஜீ தேசிகன் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு

மாலை 5 மாயவரம் கே என் பக்கிரிசாமி பாட்டு 5 0 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் கே கனகாம்பாள் வீணை 7 30 தமிழில் செய்திகள் 7 45 புத்தக விமர்சனம் 8 டி வி நமசிவாயம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனி விருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 தந்தி இசை 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் ஜனவரி 12

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 சேர்மாதேவி எம் ஆர் குருசாமி நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8 30 கோமதி சங்கரநாராயணன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில்செய்திகள் 1 40 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் கே வெஙகடரமணன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 சேர்மாதேவி எம் ஆர் குருசாமி நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 குரல்வகை இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 என் சொந்த அபிப்பிராயம் 8 எஸ் கே வெங்கடரமணன் 8 30 கோமதி சங்கரநாராயணன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இரு புல்லாங்குழல்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

செவ்வாய் ஜனவரி 13

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்பபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்பபாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்ப பாகவதர் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 சித்திரகானம்இசைத்தட்டு 7 15 அறுவடை இலக்கிய வாசகம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 என் வி வசந்தகோகிலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 எல் கணபதியாபிள்ளை வயலின் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.


## தேவை

கோக்குவில் மத்திய ஐக்கிய பண்டசாலைக்கு கணக்கு எழுதக்கூடியவரும் விற்பனவு செய்யக்கூடியவருமாகிய ஒருவர் தேவை. தாரதாத்துக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்கப்படும். 15—1—48 க்கு முன் நற்சாட்சிப் பத்திரங்களுடன் காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்யவும்

இங்ஙனம்

வ ந. மாணிக்கவாசகர்
கௌரவ காரியதரிசி
கோக்குவில் மத்திய ஐக்கிய சங்கம்

2—1—48
M 217 6—9

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய

## பிரதமவகுப்பு நூல்கள்

1 நாலாந்தரப் பூமிசாத்திரம் ( 7-ம் பதிப்பு ) விலை சதம் 80
2 ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் ( 5-ம் பதிப்பு ) விலை ரூபா 1
3 நாலாந்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 35
4 ஐந்தாத்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 50
5 இரண்டாம மூன்றாந்தரக் கணிதங்கள் ( அச்சில் )
விரைவில் வெளிவரும்

☞ புதியபாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கில பாடசாலைகளில்கல்விபயிலும் தமிழ்ச்சிறார்களுக்கும் உகந்தபாடப்புத்தகங்களாகும்

வட இலங்கா புத்தகசாலை
பெரியதெரு, பருத்தித்துறை

## நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது
யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
" நாகபட்டணம் 115
யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு.
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு
Std 22. 6-6-47—6-6-48

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000, பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

2 ம்பக்கத் தொடர்ச்சி

யைப் பார்த்து "அக்கா, நீங்கள் இந்த நிலையிலிருக்க, எங்கள் அண்ணு எப்படி உடன்படுவார்" என்று மெலலச் சொன்னாள்; 'தங்காய், என்னுடைய நோக்கமும், நான் கொண்ட நியதியும் உமக்குத் தெரியுந்தானே, என்னை அண்ணுவாக, தாயாராக, வேறு எவராக, நான் மனத்தில் வரித்துள்ள அவருக்கன்றி வேறெவருக்கேனுங் கல்யாணஞ்செய்துவைக்கப்போவதில்லை; நான் சம்மதிக்கப் போவதுமில்லை; மேலும் தமயனார் "அரசன் உபாத்தியாயர் தம் முன் ...." என்ற பாட்டின்படி ஐந்து பிதாக்களுள ஒருவராவர்; அதன்படி அவர் விவாகஞ் செய்யலாம்; அவர் என் விவாகத்திறகு ஒரு நிச்சயமுஞ் செய்யாமல், தாம் விவாகஞ் செய்வாராயின் அவரை உலகஞ் சிலவேளை குறைசொல்லுதலுங் கூடும் எனக்கு நிச்சயித்த விவாகம இன்னமுங் கைகூடாதிருத்தல் என் விதிப்பயன்; தமயனார் விவாகஞ் செய்யாமலிருந்தாலும், விவாகஞ்செய்து இல்வாழ்க்கையை இனிது நடத்தினாலும், என்விஷயத்தில் வருந்தி யழைத்தாலும் "வாராத வரா" என்ற மனவைராக்கியத்தோடு நான் எஞ்சியவாழ்நாளையும் நல்லவழியிற் கழிக்கவேண்டும்; இம்மைசகு இல்லையாயினும் மறுமைக்கு உறுதுணையாகிய புண்ணியத்தை ஈட்டவேண்டும்: தங்காய் உம்மைப் போன்ற மனமொத்த சகோதரியுடன் என் அந்தரங்க நோக்கங்களைச் சொல்லி யோசித்த அதன்படி நடப்பதற்காகவே நான இப்பொழுது பிரதானமாக இங்கு வந்தேன்; அண்ணு விவாகஞ்செய்து விட்டிலிருக்க, எங்கள் தாயாரும் நானும் இராமனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு காசியாத்திரை செய்ய வேண்டுமென்பதுதான் என்னோக்கம்; தங்காய் இப்பொழுது உனக்கும் எங்கள் தனபாக்கியத்திற்குமே என்னுடைய நோக்கத்தை முதன் முதலாக வெளியிடுகிறேன்" என்று சொல்லிமுடித்தாள் சிவபாக்கியம்.

### "கடலுங் கலங்கித் தெளியும்"

இவற்றையெல்லாம் சிந்தனையோடு கேட்டுக்கொண்டிருந்த பாக்கியலட்சுமி கவலை மிகுந்தவளாய்ச் சிவபாக்கியத்தைப் பார்த்து "அக்கா, உங்களுக்குச் சமாதானஞ் சொல்ல என்னால் முடியாது; உங்கள் நோக்கத்தை அம்மாவிற்கேனும் அண்ணுவிற்கேனும் வெளியிட்டதுண்டோ" என்று கேட்க, "தங்காய், என்னுடைய நோக்கத்தை அம்மாவிற்கும அண்ணுவிற்கும் வெளியிட்டுவிட்டேன். ஆனால் காசியாத்திரை செய்யும் நோக்கத்தை மாத்திரம் இன்னமும் அவர்களுக்கு நான் சொல்லவில்லை. நீர் அதனை அவர்களுக்குச் சொல்லலாம்" என்றாள் சிவபாக்கியம்: கேட்ட பாக்கியலட்சுமி சற்றுநேரஞ் சஞ்சலப்பட்டாள்; இருதலைக்கொள்ளியினுள்ளகப்பட்ட எறும்புபோல் இடரப்பட்டாள். தன மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு சிவகுருநாதனுந் தாயும் ஒருங்கிருக்குஞ் சமயம்பார்த்துத் தன தமக்கை கொண்டுள்ள நோக்கத்தை அவர்களுக்கு வெளியிட்டாள்; கேட்ட இருவருந் திடுக்குற்றார்; சற்றுநேரம் யாதும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையோடிருந்த சிவகுருநாதன், "கடலுங் கலங்கித்தெளியும்" என்றபடி ஒருவாறு தன் சிந்தனையொழிந்து உள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டு தாயை நோக்கி "அம்மா, கவலைப்படாதீர்கள், எது நடக்கவேண்டுமோ, அது நடந்தே தீரும். இது பெரியோர்கள் கண்ட உண்மை; என் அருமைத்தங்கைச்சி கொண்ட நோக்கங்கள் எல்லாவற்றிற்கும் நாம் தடையாக நின்றால், தங்கைச்சியின் மனம் பேதப்படுதலுங்கூடும்; ஆனதனால், என் தங்கை காசியாத்திரை செய்யவேண்டுமென்று விரும்பினால், நாங்கள் அதற்காகவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவைப்பது தான்முறை; அல்லாமலும், அம்மா நீங்களும் அந்தியகாலத்திலே காசியாத்திரை செய்யும் பேறு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது; ஆணுகப் பிறந்தாலும் எனக்கு அந்தப் பேறு இன்னமுங் கிடைக்கவில்லை; எங்கள் அப்பருக்குக் கிடையாமற் போய்விட்டது; காசி யாத்திரை செய்யவேணும்; வேறு எந்தத் தல யாத்திரை தீர்த்த யாத்திரைகள் செய்யவேணும் பூர்வ புண்ணியம் வேணும் அம்மா" என்று சொன்னான்; 'மகனே, நீ சொல்லுவது நிசம்; ஆனால் என்பிள்ளை கல்யாணஞ் செய்து தம்பதிகளாய்க் காசி யாத்திரையோ, வேறு எந்த யாத்திரையோ செய்வதென்றால் என் மனஞ் சந்தோஷமடையும், கைம்பெண்ணுங் கன்னிகையும் காசி யாத்திரை செய்வதென்றால், என் மனம் எப்படிடா மகனே ஆறுதலடையும்" என்று சொல்லிக் கண் கலங்கினாள் கண்ணகியம்மை; "அம்மா, அதற்கென்ன செய்யலாம்; புண்ணியத்தைத் தேடுதற்காகிய கருமத்தை உத்தேசிக்கும்போது கவலைப்படாதீர்கள்; என் தங்கையின் விருப்பம் நிறைவேறவேண்டும்: அவளோ தெய்வபத்தியும் நியதியும் பூண்டவள். அவளுடைய நோக்கத்திற்கு நாங்கள் மாறுகின்றாற் பழிவந்துசேரும்" என்று மகன் சொல்லத் தாயும ஒருவாறு மனந்தேறி அதற்குச் சம்மதித்தாள். பின்னரும் தாய் தன் மகனைப் பார்த்து "மகனே, இங்கே புறப்பட்டு வரும்போது உங்கள் சாதகக் குறிப்புக் கொண்டுவந்திருக்கிறேன்: உன் தங்கைச்சியின் சாதக பலன் இந்த நேரத்தில் எப்படி என்று யாராயினும் சோதிடருக்குக் காட்டிப் பார்ப்பித்தால் நல்லது, யாத்திரை போவதானாலும் கால நேரம நல்லவோ என்று பார்த்தறிந்துதானே புறப்படவேண்டும்" என்றாள்: மகன் "ஆம் அம்மா, அது முறைதான்" என்று சொல்லிவிட்டு விசயரத்தினத்திடம் போனான்.

### "எங்கள் புரோகிதர்"

போனவன் விஜயரத்தினத்திடம் 'இந்தப்பட்டினத்தில் யாரும் சிறந்த சோதிடர் இருக்கிறாரோ" என்று கேட்க, விஜயரத்தினர் ஓம் என்று சொல்லிப் பின்னருஞ் சொல்லுகின்றான்; "இங்குள்ள மாரியம்மன கோயில் அர்ச்சகர் இராமசாமி ஐயர் யாழ்ப்பாணத்திலிருந்து பல வருடங்கட்கு முந்தியே இங்குவந்து இக்கோயிற் பூசையை ஏற்றுச் செய்து வருகிறாராம்; அந்த ஐயர் தமிழ் சம்ஸ்கிருதம் நன்கு பயின்றவர். புராணபடனஞ் செய்பவர்; சோதிடம், விஷவைத்தியம், மாந்திரீகம் முதலியன நன்கு பயின்றவர் இங்கே எங்கள் புரோகிதரும அவரே; இன்று வெள்ளிக்கிழமையல்லவா, என் மனைவியும் நானும் பொழுதுபட அந்தக் கோயிலுக்குப் போவோம்; அப்பொழுது நீரும் வரலாம்; சுவாமிதரிசனஞ் செய்தபின்பு, ஐயரைக் கண்டு விஷயத்தைச் சொல்லி, நாளைக்கு வீட்டிற்கு வரும்படி சொன்னால் அவர் வருவார். ஆகவேண்டியதைப் பார்ப்பித்துக்கொள்ளலாம்" என்று விஜயரத்தினஞ் சொல்ல, சிவகுருநாதனும் அதற்கு உடன்பட்டு அப்படியே செய்தான்; சங்கேதப்படி அடுத்தநாட் காலை புரோகிதர் விஜயரத்தினத்தின் வீட்டிற்கு வருதலும் அங்குள்ளவர்கள் அவரைத் தக்கவாறு உபசரித்தனர். யாழ்ப்பாணத்து [illegible] ணகியம்மை [illegible] கோத்திரத்தை விசாரித்தபோது அவர் யாழ்ப்பாணத்திலே தங்கள் புரோகிதராகவுள்ள ஐயரின் குடும்பத்தைச் சேர்ந்தவரெனபதை அறிந்தாள்; ஐயரும் கண்ணகியம்மையின் மரபு முதலியனவற்றை யறிந்தார்; இருவரும் பரஸ்பரம் தொனமை பாராட்டினர்; கண்ணகியம்மை தங்கள் வரலாற்றையும் தாங்கள் மலாய்நாட்டில் வந்திருத்தற்குக் காரணத்தையும், தன் பிள்ளைகளின் நிலைமையையும் ஐயருக்கு விபரமாகச் சொல்லிக் கவலைப்பட்டாள், ஐயர் தேறுதல் சொல்லிச் சிவபாக்கியத்தின் சாதகக் குறிப்பைத் தரும்படி கேட்க, கண்ணகியம்மை அதனைக்கொடுக்கும்போது "சாமீ, கன்னிகையாகவுள்ளவர்களும் யாத்திரை செய்யலாமோ? அப்படி எங்கேனும் பாடல்படிப்பிற் சொல்லப்பட்டிருக்கிறதோ" என்று வினவ "இக்காலத்தில் நம்மவர்களுள் அப்படியான வழக்கமில்லை யானாலும், கன்னிகை யொருத்தி காசியாத்திரை [illegible] தனக்குகந்த கணவனைப்பெற்று வாழ்ந்த கதையொன்றுண்டு" எனலும் "அக்கதையைச் சொல்லுங்கள சாமி" என்று கண்ணகியம்மை கேட்க, ஐயர் சொல்லத்தொடங்க, பாக்கியலட்சுமி, சிவபாக்கியம், தனபாக்கியமென்னுமிவர்களும் அக்கதையைக் கேட்கும்படி ஐயருக்குச் சமீபமாக ஒதுங்கி நின்றனர். (வரும்)

# கதிர்காமம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

நடப்பதுபோலவும் மற்றும் பக்தர்களுக்கு இடைஞ்சலைக் கொடுப்பது போலும் சிங்கள ஆடவர்களும், பெண்மணிகளும் கொடுக்காமல் மானம் மரியாதையுடன் தெரிசிப்பது அகிம்சையின் தத்துவத்தைக் காட்டுகின்றன.

தமிழ்ச் சாகியத்தார்போன்ற சிங்களச் சாகியத்தாரும், ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தகாலந் தொடக்கம் கல்வியில் ஊக்கம் எடுத்திருந்தால் அவர்களின் ஞானஅறிவையும், கல்விப் பெருக்கையும், கலைப்பெருக்கையும் கூறமுடியாது. இப்போது, கல்வி அறிவு மேம்பட்டமையால தமிழிலுள்ள தேவாரம், மாலை, கீர்த்தனைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டுப் பிரசாரஞ்செய்து அறிவையும பக்தியையும ஊட்டிவருகின்றனர். இதன் பயனாக எண்ணரிய மக்கள் தங்கள் குரவராகிய புத்தர் வணங்கிய தெய்வங்களைத் தாங்கள் வணங்கும தெய்வங்களென்று கண்டு அவைகளை (சைவசமய விக்கிரகங்களை) வழிபட்டு வருகின்றார்கள் இவ்வாறு மலாயாவிலுள்ள சீனச் சாகியத்தாரும் சைவசமய ஆலயங்களுக்குச் சென்று வணங்கி வருகின்றார்கள். இவ்விருக்க சிங்களரும் தமிழரும வெவ்வேறு சமயத்தவர்களென்று தமிழர்கள் வேற்றுமைசெய்வது நீதியாகுமா? சிங்களச் சகோதர சகோதரிகள தங்கள் குரவராகிய புத்தபிரான் பின்பற்றிய சமயமாகிய சைவசமயத்தை ஓங்கிவளரச் செய்வார்களென்பது திண்ணம்.

தாழ்ந்த நிலையிலிருந்த சைவசமயத்தை. அச்சமயத்தைச் சேர்ந்த பக்தர்களும் சமயாபிமானிகளும், ஏறிட்டுப் பார்க்கவில்லை; தூக்கியும் விடவில்லை அசோகனும், அவன் சந்ததியாரும், இலங்கையர் (சிங்களர்) களும இந்துசமயத்துக்குப் புத்துயிர் அழித்து உலகெங்கும் பரவச்செய்தார்கள். புத்தசமயிகள் வேதாந்த சங்கத்தைச் சேர்ந்தபடியால் விபூதி, ருத்திராஷம தரிக்கவில்லை, சைவசமய நூல்களில், சித்தாந்தத்தையும் வேதாந்தத்தையும இரண்டுபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன, ஆகையால் விபூதி, ருத்திராக்ஷம் தரிக்கும் சித்தாந்திகளை சைவசமயிகளென்றும வேதாந்த முறையைக் கைப்பிடித்து நிர்வாணதசையை அடைந்த புத்தபிரானைப் பின்பற்றியவர்களைப் புத்தசமயிகளென்றும அழைக்கப்படுகின்றன. பித்தர்காள்! பித்தம பிடித்து உழலாதீர்கள்! இவைகளிரண்டும் சிவபெருமானைக் கைகூப்பித தொழும வலது, இடது கரங்களா கும். உணர்வீர்! உணர்வீர்! வெவ்வேறு சமயிகளென்ற மயக்கத்திலிருந்து தெளிவீர! தெளிவீர்! புத்தரின விக்கிரகத்தை எம் ஆலயங்களில் வைத்துப் பூஜித்து முழு இலங்கையரின் இரத்தமும், சமயமும், கொடியும் ஒன்றென்று உலகத்துக்குக் காட்டுவோமாக. ஒன்றென்றிருந்தால பிறிதொன்றில்லை. ஒன்றென்றிருந்தால் சிங்களச் சகோதரர் எம்மைப் வேற்றுமைபடுத்த முடியாது அப்படி அவர்கள் செய்தால் அஃது அவர்களுக்குப் பெலக்குறைவைக் கொடுத்து கீழ்நிலையை அடையச் செய்யும.

19-12-47ல் வெளிவந்த இதழில் அரசியல் நிருபர் ஐ. தே. க. தமிழ்க் காங்கிரஸ் ஒற்றுமை யென்னும் தலையங்கத்தின கீழ், நாம என்றும் எதிர்பார்த்திராத பொன்மொழிகளை வாரி இறைத்திருக்கின்றார் அப்பெரியார் கூறிய யாவும அவர் கூறியதன்று. கரைதெரியாது தத்தளித்துக்கொண்டிருக்கும் எமக்குக் கரையைக் காட்டுவதாகக கந்தக் கடவுள் அவரின் உள்ளத்திலிருந்து வவியிருக்கின்றார். அப்பொன்மொழிகளின்படி தமிழராகிய நாமும், எம் தலைவர்களாயுள்ளோரும செய்வோமானால் சாந்தம் கொண்டு சக்திபெறுவோம், வெறுத்தவரெவரையும் விரும்புவோம். கதிர்காமக்கந்தன் திருவருள் பாலிப்பாரா.

### இந்தியாவின் முறைப்பாடு

காஷ்மீரத்தில் மலை ஜாதியினர் படையெடுப்பதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் பரண உதவிபுரிந்துவருகிறது. இதனைப்பற்றி விசாரணைபுரியவேண்டுமென்று இந்திய அரசாங்கம் ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கு முறையிட்டிருக்கிறது. இந்த முறைப்பாடு சென்ற செவ்வாய்க்கிழமை விசாரணை செய்யப்படவிருந்தது ஆனால் இந்த முறைப்பாட்டுக்குப் பதில் இறுக்கத் தனக்குச் சாவகாசம் கிடைக்கவில்லையென்றும் தான் மறுமொழியைத் தயார் செய்வதற்குத் தவணை வேண்டுமென்றும் பாகிஸ்தான் பிரதிநிதி ஐக்கியதேச ஸ்தாபனத்துப் பாதுகாப்புச் சபையைக் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, அச்சபை, வருகிற வாரம் வரைக்கும் தவணை கொடுத்திருக்கிறது. வருகிற வாரம் இப்பிரச்னை விசாரணைக்கெடுக்கப்படும்போது, இந்தியாவின் கட்சியை விவாதிக்க, ஸ்ரீ என், கோபாலஸ்வாமி ஐயங்கார், ஷை ஸ்தாபனத்துக்குச் செல்வார். பாகிஸ்தானுடைய கட்சியைக் கூறுவதற்கு, அந்நாட்டின் அந்நியநாட்டு மந்திரி சேர். ஸபாருல்லாக்கான் செல்லலாம்.


## மனேஜர் தேவை

வியாவில் ஐக்கிய பண்டகசாலை

காரைநகர்

ஷை பண்டசாலைக்குஒருமனேஜர்தேவை தெரிவு செய்யப்படும் மனேஜர் ரூபா (300) முன்னூறு ரொக்கப்பிணை கட்டவேண்டும். மாதச்சம்பளம் (50) ஐம்பது ரூபா. விரும்புவோர் 21—1—48 க்கு முன் நற்சாட்சிப்பத்திரங்களுடன் தமது தகைமையைக் குறிப்பிட்டுக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

க. சரவணமுத்து
காரியதரிசி

வி. ஐ ப. சா.
காரைநகர்
8—1—48

M 219 9, 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமே மெய்ச் சமயம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வனே சுவானுபூதியிற் காணின், அவ்வான்மாவுக்குப் பிறப்பில்லை, என்பது உறுதியென்றும் சிவநெறிக் கொள்கை 'ஓர்த்துள்ளம் உள்ளதுணரின்' என்ற அருமைத் திருக்குறளிற் கூறப்பட்டுள்ளமை கண்டு மகிழ்க. 'சார்புணர்ந்து' என்ற திருக்குறளில் 'ஞானநிட்டை கூறப்பட்டுள்ளதை திருக்கடலூர் உய்யவந்த தேவர் திருக்களிற்றுப் படியாரில் ஓதியருளியுள்ளார். 'வேண்டுங்கால் வேண்டும பிறவாமை' என்ற திருக்குறளையும் மேற்கோளாகக் கொண்டு திருக்களிற்றுப்படியாரில் திருவெண்பா ஒன்று ஓதியருளப்பட்டுளது. இதுகாறும் கூறிய வாற்றுல், சிவநெறிக் கொள்கைகள், மெய்கண்டநூல்கள் தோன்றுவதற்கு மிக முற்பட்ட காலந்தொட்டே தமிழரிடைப் பரவியிருந்தனவென்றும், அக்கொள்கை வழி அவர் நின்றொழுகினர் என்றும் தெளிவாகும். மெய்கண்ட நூல்களைத் தமவாகப் பெற்றுள்ள தமிழர்களின் பேற்றை அளக்கவொண்ணுது. சிவஞானபோதச் சூத்திரங்களைப் போலத் திட்பமும், செறிவும், தெளிவும் ஒருங்கேயுடையன வேறெம் மொழியினும் இல்லையென்பது உறுதி. பிரமசூத்திரத்திலுள்ள வடமொழிச் சூத்திரங்களை, மெய்கண்டார் சிவஞானபோதச் சூத்திரங்களோடு ஒப்பிட்டுநோக்கின் அவ்வுண்மை வெளியாகும்; பிரம்ம சூத்திரத்தில், வெவ்வேறு மாறுபட்டு பிணங்கும் கொள்கைகளை அதற்கு உரைகண்ட ஆசிரியர்கள் காண்கின்றுர். ஒரு சூத்திரம், அதனையே மாறுபட்டு பல பொருள்களுக்கு நிலைக்களமாய் இருக்குமாறுல் அச்சூத்திரத்தில பொருட்டெளிவில்லையென்பது கூறுமலே அமையுமன்றோ? பொருட்டெளிவின்மை சிவஞானபோதத்தில் யாண்டுமில்லை.

சிவஞானபோதச் சூத்திரம் தருக்கநெறி பிறழாது செல்லும் இயல்புடையது. யாரேனும் எச்சூத்திரத்திலேனும் தருக்க வழுக்கண்டாராக எண்ணில், அவர் அக்கருத்தை வெளிப்படுத்துமுன் அச்சூத்திரத்தைப் பலமுறை நுணுகி யாராய்தலவேண்டும். ஆராய்ந்தும, வழுக்காண்பரேல், அதன் பொருளைத் தக்கார் வாய்க் கேட்டுணரல் வேண்டும். அங்ஙனம் கேட்டுணர்வரேல் அச்சூத்திரங்களனைத்தும், தருக்கநெறி பிறழாதுள்ளமையைத் தாமே காண்பர். பொருளின் உண்மை காண்டற்கு, காண்டல் கருதல்போலவே உரையும் சிறந்த அளவை. உரையை அளவையன்றென விலக்கிவிடின் சிறந்த அளவையை விட்டிழந்தவர்களாவோம்.

'உளதில தென்றலின்
எனதுட லென்றலின்
ஐம்புலன் ஒடுக்க
மறிதலில கண்படில்
உண்டிவினே யின்மையின்
உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர
தனுவினுள் ஆன்மா'

என்னும் சிவஞானப் போத சூத்திரம் ஆன்மப் பிரகாசம் உணர்த்த எழுந்ததாகும். இது மூன்றுவது சூத்திரம. இச்சூத்திரத்தில தழுவப்படும் தருக்கநெறி, முறையுடைய தென்றென நம் மூதறிஞர் சிலர் கருதுகின்றனர். இதனைக் கூறிய ஆசிரியர், தருக்க நெறியின் துணையின்றிச் சில முடிபுகளைத் தம்மகத்தே ஏதோ வேறு காரணங்கொண்டு, தம்முள்ளத்தில் நிறுவியபின், அக்கொள்கைகளை நிலைநாட்டச் சில நியாயங்களைத் தேடி, தருக்க நெறியில் நேர்நில்லாத சில போலி முறைகளைக் கையாடி உள்ளாரென அவ்வறிஞர் கருதுகின்றனர். அத்தருக்க நெறியை ஆங்கில அறிஞர்கள், நேர்மையுடையதெனக் கொள்ளாரென அவர் கூறுகின்றனர். ஆங்கில அறிஞர்களும், இச்சூத்திரத்தமைந்துள்ள தருக்கநெறியை வழுவெனக் கூறத் துணியார். அவர் ஒருக்கால் மயங்கிக் கூறினும், இச்சூத்திரம் வழுவுடையதன்று. ஆசிரியர்காலத்திலே ஆன்மாவைப்பற்றி எண்வகைக் கருத்துகள் நிலவின. அவற்றுள் அந்தக்கரணான்ம வாதத்தைத் தவிர ஏனை எழுவகை மதங்களை மறுத்து ஆன்மாவினுண்மையை இச்சூத்திரத்தில் ஆசிரியர் நாட்டுகின்றுர். ஆதலின் ஆசிரியர் தாம் மனத்திற்கொண்ட உண்மைகளுக்குக் காரணங் காட்டுவதாகக் கூறுவது பொருந்தாது. இச்சூத்திரத்தில் வழு யாண்டுளதென அறிஞர் கூறுமையின் அறிஞர் தம் கருத்திற்கொண்ட வழுவை, வழுவென்றெனக் காட்டல் முடியவில்லை. சூனியவாதிகளை மறுக்க எழுந்த 'உளது இலதென்றலின்' என்னும் சூத்திரப் பகுதியும் தருக்கநெறி பிறழாததொன்றே. மேல் நோக்காகப் பார்த்தால் வழுவுடையதுபோல் காணப்படினும் நுனித்து நோக்கின் நடுவு நிலைமையுடையார்க்கு அஃதும் தருக்கநெறி வழுவியதாகவே காணப்படும். பன்னூற்றுண்டுகட்கு முன் வாழ்ந்த ஆங்கிலக் கிறித்தவப் பாதிரியார் ஒருவர் அந்நெறிபற்றி, கடவுள் இல்லையெனச் சிலவாதிகள் மறுப்பதாலேயே கடவுள் உளன் என நிலைநாட்டினர். அந்நெறியினை இற்றைக்கால ஆங்கில அறிஞரும் பிழையற்றதெனக் கூறுவர். சூனியவாதிகளும் ஆன்மா இல்லையென வாளா கூறுமல், உடல் பொறி, விடயமனைத்தனையும் முறையாக ஒரோ ஒன்றுகக் கழித்து இவ்வாறுகலின் ஆன்மா சூன்யமெனக் கூறுவாராகலின், அவற்றை ஒரோவொன்றுக கழித்துவிட்டு அங்ஙனம் கூறிக்கொண்டு நிற்குமோ ரறிவுண்மையின், அவ்வறிவே ஆன்மாவென நாட்டுகின்றுர். அங்ஙன நாட்டும முறை 'அறிவு நிகழ்முறை' 'அமைவுமுறை' (epistemology, ontology) பற்றி எழுந்ததென நாம கொள்ளல் தகும். இச் சூத்திரத்தை ஓதுவமேல், ஆசிரியர் தம் கருத்துட்கொண்ட பொருளைச் சில்வகைஎழுத்தில் தெளிவுடன் கூறியுள்ளார் என்பது விளங்கும். (வரும்)

---


## தந்தரோக சஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
### சந்தனாதித் தயி ம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

Std 25 1-7-4[illegible]


## சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (21-12-47) பின்னேரம் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்க மண்டபத்தில அச்சங்கத்தின் வருடாந்தக்கூட்டம்ஸ்ரீமான், டக்ரர் ப தில்லைநாதன் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. வருடாந்த அறிக்கையும் வரவு செலவுக் கணக்குகளும் வாசிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பட்டன, பின்பு இலங்கைத் தமிழர்சங்கநிருவாகசபையையும் செண்பக விநாயகராலய நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டன. ஸ்ரீமான்கள்: டக்ரர் ப தில்லைநாதன் அக்கிராசனராகவும், டக்ரர் T. பாலசிங்கம் உதவி அக்கிராசனராகவும், S. வேலாயுதம் காரியதரிசியாகவும், K, அம்பலவாணர் தனதிகாரியாகவும், S. சின்னையா வித்தியாபகுதிக் காரியதரிசியாகவும், ஆர்தர் யோசேப்பு விளையாட்டுப் பகுதிக்காரியதரிசியாகவும், S. செல்வநாயகம், S. C. சோமசேகரம், A. வேலுப்பிள்ளை, M. நமசிவாயம், P. இலங்கையர் C. கார்த்திகேசு, K முத்துக்குமாரு, S. A. வடிவேலு, V கனகசபை முதலியோர் இலங்கைத் தமிழர் சங்க நிருவாகசபை அங்கத்தவர்களாகவுந் தெரிவு செய்யப்பட்டார்கள்,

ஸ்ரீமான்கள் S. அம்பலவாணர் அக்கிராசனராகவும், P. வேலுப்பிள்ளை காரியதரிசியாகவும், N. ராமேஸ்வரம் தனதிகாரியாகவும் டக்ரர் L. தில்லைநாதன், K. வயிரவநாதன், A, இலங்கையர், S. செல்வநாயகம், S. இராசநாயகம் K. முத்துக்குமாரு, M. நமசிவாயம், கதிர்காமர், S. செல்வநாயகம் ஆதியவர்கள் நிர்வாகசபை அங்கத்தினராயும் சிங்கப்பூர் காத்தோங் சிலோன் தெருவிலிருக்கும் செண்பக விநாயக ராலயத்தின் பரிபாலன சபைக்கு நியமிக்கப்பட்டார்கள்


## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செககடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48



# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை குருணுக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஒ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std 29 1-8—30-7-48


வான்முகில் வழாது பெய்க மலிவள நுசுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மென்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday. January 9. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org